

# “மனுநீதிக்கு எதிரான சமநீதியே தமிழ் அறம்!”

**கழக இளைஞர் அணி நடத்திய, ‘தி.மு.க. 75 அறிவுத் திருவிழா’ நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற முற்போக்கு புத்தகக் காட்சி நிகழ்வில், ‘தமிழுக்கு அறம் என்று பேர்’ என்ற தலைப்பில், கவிஞர் யுகபாரதி அவர்கள் ஆற்றிய உரை :**

“மிகவும் ஆச்சரியகரமான ஒரு நிகழ்வு இது. என்ன ஆச்சரியகரமான நிகழ்வு என்றால், ஒரு புத்தகக் காட்சிக்கு ‘முற்போக்கு புத்தகத் திருவிழா’ என்று பெயர் வைப்பது. புத்தகமே முற்போக்குதான். ஆனால், முற்போக்கு புத்தகத் திருவிழா நடத்துவதற்கு, அதுவும் வள்ளுவர் கோட்டத்தைத் தேர்ந்தெடுப்பதற்கு, ஓர் அரசியல் தேவைப்படுகிறது. அந்த அரசியலை, மரியாதைக்குரிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாகச் செய்து கொண்டிருக் கிறார்கள் என்பதில் எனக்கு மகிழ்ச்சி.

எனக்கு ‘தமிழுக்கு அறம் என்று பெயர்’ என்று தலைப்பு கொடுத்திருக்கிறார்கள். தலைப்பு எதைக் கொடுத்திருந்தாலும், அணில் குஞ்சி லிருந்துதான் நாம் நம் பேச்சை ஆரம்பிக்க வேண்டும். நான் அணில் குஞ்சு என்று சொன்னது ஒரு சிறுகதையைப் பற்றி. ‘அணில் குஞ்சு’ என்கிற கதை 1995-ஆம் ஆண்டு ‘இந்தியா டுடே’ பத்திரிகையில் வந்தது என்று நினைக்கிறேன்.

## மத நல்லிணக்கம்

1992-ஆம் ஆண்டு டிசம்பர் 6. பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது, நாடு எப்படி இருந்தது என்று, நம் எல்லோருக்கும் தெரியும். அந்த நேரத்தில், அந்தச் சூழலில் எழுதப்பட்ட ஒரு கதை இது. அந்தக் கதையை உங்களுக்குச் சொல்கிறேன்.

பாரூக் என்று ஒரு பையன் புனித மேரி பள்ளிக்கூடத்தில் படிக்கிறான். நிறைய மரங்கள் அடர்ந்த பகுதியில் அவன் நடந்து வரும்போது, திடீரென்று ஒரு மரத்திலிருந்து அணில்குஞ்சு ஒன்று கீழே விழுகிறது. அதை எடுத்துக்கொண்டு வேகமாக வீட்டுக்குச் செல்கிறான். ‘அல்லா உனக்கு இந்த அணிலைப் பரிசாகக் கொடுத்திருக்கிறார்’ என்று அவன் அம்மா சொல்கிறாள். வீட்டுக்கு வரும் அப்பாவும் அணிலை வளர்க்க சம்மதம் தெரிவிக்கிறார்.

அப்போது பாரூக், ‘இந்த அணில் முதுகில் மூன்று கோடு இருக்கிறது அல்லவா, அந்தக் கோடு என்னவென்று தெரியுமாடா உங்களுக்கு, என்று என்னிடம் ஒருநாள் என் ஆசிரியை கேட்டார். ‘ராமர் பாலம் கட்டும்போது இந்த அணில் உதவி செய்ததாம். அதனால், ராமர் தடவிக் கொடுத்தாராம். அதனால்தான் இந்த மூன்று கோடுகள் இருக்கின்றன அல்லவா?’ என்று எங்கள் ஆசிரியை சொன்னார்கள்’ என்று பாரூக் சொன்னான். இந்தக் கதையைக் கேட்டவுடனே, அவனை அணில் வளர்க்கக் கூடாது என்று அவன் அப்பா சொல்லிவிட்டார்.

அந்த அணிலை அதே மரத்தடியில் விட்டுவிடலாம் என்று செல்லும்போது, அங்கே வந்த ஆராவமுது ஐயங்கார், ‘இது எங்கள் ராமரின் அணில். அதை முஸ்லிமாகிய நீங்கள் வளர்க்கக் கூடாது’ என்கிறார். இதைக் கேட்டவுடனே பாரூக்கின் அப்பா மனம் மாறி, ‘நாமே இந்த அணிலை வளர்க்கலாம்’ என்கிறார். பாரூக்கின் அப்பாவுக்கும் ஆராவமுது ஐயங்காருக்கும் வாக்குவாதம் ஏற்படுகிறது. இரு தரப்பிலும் சிலர் சேர, சண்டை பெரிதாகிறது. அப்போது எங்கிருந்தோ வந்த பருந்து அந்த அணில்குஞ்சைத் தூக்கிக்கொண்டு பறந்துவிடுகிறது.

இப்போது இருக்கிற அணிலை எந்தப் பருந்து தூக்கிக்கொண்டு போனது, பருந்து எதனுடைய குறியீடு என்பது உங்களுக்குத் தெரியும். இந்தக் கதையை 1995-ல் எழுதியவரின் பெயரை நான் சொல்லிவிடுகிறேன். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுதிய கதைதான் இந்த கதை.



கவிஞர் யுகபாரதி

இந்தக் கதைக்குள் முத்தமிழறிஞர் கலைஞர் மத நல்லிணக்கத்தைப் பற்றியும் மத அரசியலை வைத்து, எப்படி எல்லாம் இந்த நாட்டுக்குள் பிரச்சினைகள் நடக்கின்றன என்பது குறித்தும் எவ்வளவு அழகாக, நுட்பமாகச் சொல்லியிருக்கிறார் பாருங்கள்! ‘தமிழுக்கு அறம் என்று பெயர்’ என்கிற தலைப்போடு இந்தக் கதையை இணைத்துப்பார்த்தால், உங்களுக்குப் பல விஷயங்கள் புரியும்.

## அண்ணாவின் அறம்

1950-களில் மயிலாடுதுறையில் திராவிட முன்னேற்றக்கழகக் கூட்டம். அண்ணாவின் உரையைக் கேட்பதற்காகப் பெருந்திரளான மக்கள் கூடியிருக்கிறார்கள். மக்களிடம் நிதி வசூல் செய்து அந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்தவர் ஒருவர், அவருக்கு மேடையில், அண்ணாவின் அருகில் அமர வேண்டும் என்று ஆசை. ஆனால், பலரும் அண்ணாவின் அருகில் அமர்ந்துவிட, மேடையில் அவருக்கு இடம் கிடைக்கவில்லை.

அவர் மிகவும் நொறுங்கிப் போய்விடுகிறார். ‘இவரெல்லாம் ஒரு தலைவரா? இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டு நான் கூட்டம் நடத்துகிறேன். நான் பக்கத்தில் உட்காரவில்லை. நான்தானே நடத்து கிறேன், அவராவது என்னை அழைத்து உட்கார வைக்க வேண்டாமா?’ என்று அண்ணாவின் காதுபடவே அவரைத் திட்டிவிடுகிறார். அதைக் கண்டும் காணாமல் இருந்த அண்ணா அந்தக் கூட்டத்தில் மிகச் சிறப்பாக ஒரு மணி நேரம் உரையாற்றுகிறார்.

கூட்டம் முடிந்த பிறகு, யார் தன்னைத் திட்டினாரோ அவரைத் தவிர மற்றவர்களைத் தனியாக அழைத்துப் பேசிய அண்ணா, ‘அந்தத் தம்பியின் ஆதங்கம் சரிதான். எனக்காக மக்களிடம் நிதி திரட்டி கூட்டம் நடத்திய அந்தத் தம்பிக்கு மேடையில் இடம் கிடைத்திருக்க வேண்டும். அந்த ஆற்றாமையில்தான் என்னைத் திட்டிவிட்டான். ‘அண்ணாவைத் திட்டிவிட்டாயா நீ?’ என்று அவரை யாரும் கோபித்துக்கொள்ளக் கூடாது. இன்னும் குறிப்பாக, நான் சொல்கிறேன், எந்தச் சந்தர்ப்பத்திலும் அவன் இந்தக் கட்சியை விட்டு வெளியே செல்வதற்கு, எந்தச் சூழலையும் நீங்கள் ஏற்படுத்தி விடக்கூடாது. அவனை நீங்கள் பக்குவமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்’ என்று சொல்லிவிட்டுப் போய்விடுகிறார்.



* துரை.தாமோதரனின் பகுத்தறிவு மேஜிக் நிகழ்ச்சி

15 ஆண்டுகளுக்குப் பிறகு, 1967-இல் தேர்தல் முடிவு வருகிறது. மாயவரம் தி.மு.க வேட்பாளர் வெற்றி என்று ஒரு பெயர் அறிவிக்கப்படுகிறது. அந்தப் பெயர் யார் என்றால், அந்த மேடையில் இருக்கை கிடைக்காதவருடைய பெயர்தான், மாயவரத்தில் சட்டமன்ற உறுப்பினர் என்கிற வெற்றிச் செய்தியைச் சொன்ன கிட்டப்பா என்கிற பெயர். அந்தக் கிட்டப்பாதான் அண்ணாவைத் திட்டியவர்.

15 வருடமாக ஒரு தொண்டனைப் பார்த்து பார்த்துப் பழகி, பயிற்றுவித்து, பக்குவப்படுத்தி, பண்புடையவனாக மாற்றி, மேடையில் இருக்கை கிடைக்காதவருக்கு சட்டமன்றத்தில் இடம் வாங்கிக் கொடுத்து, ஒரு சட்டமன்ற உறுப்பினராக ஆக்கக்கூடியவர்தான் மாபெரும் தலைவர். அதனால்தான் மாபெரும் தலைவர் அண்ணா என்று நாம் சொல்கிறோம். அண்ணாவிடம் இருக்கக்கூடிய இப்படிப்பட்ட பண்புகள் எல்லாமே நம்முடைய தமிழின் அறத்திலிருந்து வந்த பண்பு.

## மனுநீதியும் தமிழின் அறமும்

இங்கே வள்ளுவர் கோட்டத்தில் இருக்கும் தேரைப் பார்த்தவுடன் பலருக்கும் மனுநீதிச்சோழனின் கதை நினைவுக்கு வரும். மனுநீதிச்சோழன் மகனின் தேர்க்காலில் ஒரு கன்று அடிபட்டு இறந்துவிடுகிறது. அதற்கு நீதி கேட்டு பசு ஆராய்ச்சி மணியை அடிக்கிறது. உடனே, மனுநீதிச்சோழன் தன் மகனை தேர்க்காலில் இட்டுக் கொன்றுவிடுகிறான். இது மனுநீதிச்சோழன் கதை.

‘புணரி பொருத பூமணல் அடர்கரை ஆழி’ என்று நற்றிணை 11-ஆம் பாடல், உலோச்சனார் என்ற புலவர் எழுதியது.

ஒரு தோழியும் தலைவியும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அப்போது தலைவி சொல்கிறாள், ‘என் காதலன் எப்போதுமே குறித்த நேரத்தில் வராமல் தாமதமாகவே வருகிறான். அதனால் எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. நான் அவனைப் பிரிந்துவிடலாம் என்று நினைக்கிறேன்’ என்று சொல்கிறாள்.

‘ஏய், அப்படியெல்லாம் சொல்லாதே. அவன் உண்மையிலேயே நல்ல பையன்தான்’ என்று அந்தத் தோழி சொல்கிறாள். உடனே தோழி ‘எப்படி சொல்கிறாய்?’ என்று கேட்கிறாள்.

‘அவன் ஒவ்வொரு தடவையும் தாமதமாக வருவதற்கு ஒரு காரணம் இருக்கிறது. நீ எப்போதுமே அவனை இரவில்தான் சந்திக்கிறாய். அவன் நெய்தல் நிலத்தைச் சேர்ந்தவன். கடற்கரைப் பகுதியில் இருப்பவன். அவன் தேரில்தான் வருகிறான். அப்படி வரும்போது இரவு நேரம் நிலவைப் பார்த்தவுடன் கடலுக்குள் இருக்கக்கூடிய நண்டுகள் எல்லாம் கரையில் வந்து விளையாடிக் கொண்டிருக்கும். அப்படி விளையாடிக் கொண்டிருக்கக்கூடிய இந்த நண்டுகளை நம்முடைய தேர்ச்சக்கரத்தில் மிதித்துக் கொன்றுவிடக் கூடாது என்பதற்காக வேகமாகத் தேரை ஓட்டாமல், தேர்ச்சக்கரத்தில் நண்டு சிக்கிவிடுமோ என்று பயந்து பயந்து அவன் வருவதனால் தாமதமாகி விடுகிறது. அதனால், அவனை நீ தவறாக நினைக்காதே’ என்கிறாள்.

மனுநீதிச் சோழனின் கதை, உயிருக்கு உயிர் என்ற பழிவாங்கலை முன்வைக்கிறது. ஆனால், நம் தமிழ் இலக்கியமோ அதற்கு முற்றிலும் மாறாக அறத்தை முன்வைக்கிறது. உயிருக்கு உயிர் எடுப்பதல்ல நீதி. எந்த உயிரும் சாகக் கூடாது என்பதுதான் நீதி. அதுதான் சமநீதி. மனுநீதி என்பது நம்முடைய மரபு இல்லை என்பதைத்தான் அந்தச் சங்கப் பாட்டு நமக்குச் சொல்கிறது. இப்படிப்பட்ட அறத்தைத்தான் நம் தமிழ் இலக்கியம் முன்வைக்கிறது” ●

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

### யுகபாரதி சொன்ன கதைகள்

‘ஒரு செய்தியைக் குறிப்பால் உணர்த்துவது தான் இலக்கியம்’ என்பதற்கேற்ப, பல்வேறு கதைகளையும் இலக்கியங்களையும் சொல்லி, அதன்மூலம் சமகால அரசியலைக் குறிப்பால் உணர்த்தினார் கவிஞர் யுகபாரதி. நாயைப் பற்றிய நாட்டுப்புறக் கதை, கரடியைப் பற்றிய பால் சக்காரியாவின் கதை, ராஜா சாண்டோ மனுநீதிச்சோழன் குறித்து திரைப்படம் எடுத்த வரலாறு, ‘பராசக்தி’ திரைப்பட இயக்குநர் கிருஷ்ணன்-பஞ்சுவில் இயக்குநர் பஞ்சுவைப் பற்றிய சம்பவம், கவிமணி தேசிய விநாயகத்தின் குழந்தைப் பாடல் என்று பல்வேறு விஷயங்களை முன்வைத்து யுகபாரதி ஆற்றிய உரை பார்வையாளர்களிடம் பெரும் வரவேற்பைப்பெற்றது.

யுகபாரதி பேசுவதற்கு முன் துரை.தாமோதரனின் பகுத்தறிவு மேஜிக் நிகழ்ச்சி நடைபெற்றது. மூடநம்பிக்கைகளைத் தோலுரித்த, இந்தப் பகுத்தறிவு மேஜிக் நிகழ்ச்சியைப் பார்வையாளர்கள், குறிப்பாக சிறுவர்கள் ஆர்வமுடன் கண்டுகளித்தனர்.